‘கருங்கடலில்’ டில்லி மந்திரி!

திராவிடநாடு

மலர் 9 | 17-9-50 | இதழ் 12

இலங்கை 15 சதம் | விலை அணா இரண்டு | மலாய் நாடு 12 காசு.

டில்லி ஆதிபத்யத்துக்கு சாவுமணி!

உரிமைப் போரின் முதல் கட்டம்

திவாகர் திகைத்த காட்சி!

தீரர்களின் வெற்றி முழக்கம்

வடநாட்டு மந்திரிகள் இங்கு வரும்பொழுது கருப்புக் கொடி பிடித்து நமது உரிமையுணர்ச்சியை வெளியிடுவதென கோவில்பட்டியில் கூடிய திராவிட முன்னேற்றக் கழக செயற் குழு தீர்மானித்தது.

9—9—50 அன்று, அதையொட்டி, சென்னைக்கு வந்த டில்லி விளம்பர மந்திரி திவாகருக்கு அவர் சென்ற விடங்களிலெல்லாம் மக்கள் கருப்புக் கொடி பிடித்து தங்கள் ஆத்திரத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

சென்னை தியாகராய நகர் இந்தி பிரச்சார சபை முன்னும், மவுண்ட் ரோடு சர்க்கார் மாளிகையிலும், காஞ்சிபுரம், மகாபலிபுரம், திருக்கழுக் குன்றம் முதலாய வெளியூர்களிலும் கருப்புக் கொடி பிடித்து, வெற்றி முழக்கம் எழுப்பப்பட்டிருக்கிறது.

திவாகர்—தென்னாட்டைச் சேர்ந்தவர்தான், கன்னட மொழி பேசுபவர்தான். எனினும், அவருக்கு நமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளோம், கருப்புக் கொடி காட்டினோம்.

காரணம், டில்லி மத்திய சர்க்கார் தென்னாட்டைச் சீரழியச் செய்து வருகிறது. எனவே, அங்கு அங்கம் வகிக்கும், அவர்கள் சுரண்டலுக்கு ஆதரவு அளிக்கும் மந்திரிமார்களுக் கெல்லாம் கருப்புக் கொடி பிடிப்பது என்பதே, நமது முடிவாகும்.

காங்கிரஸ் பெயரில் ஆட்சியிலமர்ந்து, ஏழைகளை வேதனைக்குள்ளாக்குவதோடு, நான்கு கோடி மக்கள் வாழும் ஒரு பெரிய நிலப்பரப்பை அடிமையாக்கிச் சுரண்டும் வடநாட்டு ஆதிபத்யத்துக்கு ‘கைகூலி’ தரும், டில்லி மந்திரிகளுக்கெல்லாம், நமது விழிப்புணர்ச்சியை அறிவிப்பதன் நோக்கம் தான்—கருப்புக் கொடி பிடிப்பது.

திராவிடத்துக்கு நாம் தந்த இந்த நேரடி நடவடிக்கையில், பெருமிதமான வெற்றி கிடைத்திருக்கிறது. பூரிக்கும் அளவில், மக்கள், நமது திட்டத்தை வெற்றியாக்கித் தந்திருக்கிறார்கள்.

இக்காட்சி, விழிப்புற்ற திராவிடத்தின் வெற்றி கிளர்ச்சியாகும்!

“அடைந்தால் திராவிட நாடு; இன்றேல் இடுகாடு” என்ற இலட்சியகீதத்துக்கு கிடைத்துவரும் ஆதரவைப்பிரதிபலிக்கும் வீரக்குறிப்பாகும். ஆங்காங்கு கருப்புக் கொடி காட்டுவதில் மக்கள் காட்டிய ஆர்வமும், ‘வடநாட்டு ஆதிபத்தியம் ஒழிக’ ‘திராவிட நாடு திராவிடருக்கே’, ‘திவாகரே திரும்பிப்போ’ என்று எழுப்பிய முழக்கமும், திராவிட விடுதலைப் போரில் ஈடுபட்டிருப்போரின் இதயங்களைத் தட்டி விடுவதாகும்!

கருப்புக் கொடி நாள் நடவடிக்கை—திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல ஒத்திகை! இதில பெற்றிருக்கும் மகத்தான வெற்றி, அடுத்து வரப்போகும் வெற்றிகளுக்கோர் ஆரம்பம்.

வெற்றி, கானல் நீராகாது — கருப்புக்கொடிகள் நாடெங்கும், இனி டில்லி மந்திரிகள் வரும்போது பறக்கவே செய்யும்! டில்லி ஆதிபத்தியக் கும்பலில் சேர்ந்த, காங்கிரஸ் பெயருடன் சுரண்டும்—சுரண்ட ஆதரவளிக்கும்—மத்திய சர்க்கார் மந்திரிகளை இனி ‘கருப்புக் கொடிகள்’தான் வரவேற்கும்!!

தியாகராயநகர் இந்தி பிரச்சார சபை முன் டில்லி மந்திரிக்கு கருப்புக் கொடி காட்டிய வீரர்களின், ஒரு பகுதி.



"வகுப்புத்துவேஷம் எங்களுக்கில்லை!"

'ஆரியமாயை' வழக்கு விசாரணை

சி. என். ஏ. வாக்குமூலம்

தோழர்கள் அண்ணாதுரை, கண்ணப்பன் ஆகியோர்மீது, திருச்சி கோர்ட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் "ஆரியமாயை" வழக்கு, 9—9—50 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

"நான் எழுதியுள்ள ஏட்டில் வகுப்புத் துவேஷம் எதுவும் கிடையாது. வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பிவிடும் எண்ணமோ ஒரு வகுப்பார் மீது பலாத்கார உணர்ச்சியை ஏவிவிடும் எண்ணமோ எனக்குக் கிடையாது. சமூகத்தில் சம உரிமையும் நீதியும் இருக்கவேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்ட இயக்கத்தவன் நான். ஆகவே, அந்த குறிக்கோளுக்காக, திராவிடச் சமுதாயம் சீர்குலைந்திருப்பதை எடுத்துக் காட்டவும், மீண்டும் செம்மையுறுவதற்கான வழி வகைகள் கூறவும், ஏடு தீட்டினேன். அந்த ஏடும், நான் பல சமயங்களில் பத்திரிகையில் வெளியிட்ட கட்டுரைகளின் தொகுப்பு. வரலாற்றுப் பேராசிரியர்களான, ஆபிடியூபா, சர். ஜான்மார்ஷல், ஹாவல், P. T. சீனுவாசஐயங்கார் ஆகியோருடைய ஏடுகளிலே உள்ள கருத்துக்களை, 'ஆரியமாயை'யில் வெளியிட்டிருக்கிறேன். ஆரியக் கலாச்சாரம், திராவிடக் கலாச்சாரம், ஆரிய—திராவிடக் கலாச்சாரப் போராட்டம், அதன் விளைவு, அதன் பயனாக இன்றுள்ள நிலைமை ஆகியவற்றினை விளக்கும் நோக்கத்துடனேயே "ஆரியமாயை" எழுதப்பட்டது. வகுப்புத் துவேஷம் அதில் கிடையாது—எனவே நான் குற்றவாளி அல்லவென்று தீர்ப்பளிக்கக் கோருகிறேன்"—என்ற கருத்துள்ள அறிக்கையை அண்ணாதுரை (வக்கீல் மூலம்) தந்தார். தோழர் கண்ணப்பன் சார்பாக ராமனுஜ அனந்தர் எனும் வழக்கறிஞரும் பேராசிரியர் ஒருவரும் சாட்சிகளாக விசாரிக்கப் பட்டனர்.

வழக்கு 14-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

அன்று விசாரணை, திருச்சிக்கு அடுத்த திருவெரும்பூரில் நடைபெறும்.

ஆங்காங்கே.

19—8—50 மாலை 5 மணிக்கு அரூர் பள்ளியிலிருந்து சேலம் கல்லூரித் தலைவர் இராமசாமி மறைவிற்கு அனுதாப ஊர்வலம் முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று ரேடியோ மைதானத்தில் முடிந்தது. அனுதாபக் கூட்டத்திற்கு ஆர். பாலகிருஷ்ணன் பி. ஏ., எல். டி. தலைமை வகித்தார். பாபுல் எழுதிய இரங்கற்பாவை விநாயகம் படித்தார். அப்துல் கபார் கொண்டுவந்த அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

21—8—50ல் கூடிய விருதைக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் கூட்டத்தில் சேலம் கல்லூரித் தலைவர் இராமசாமி மறைவிற்கு வருந்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

27—8—50 இரவு மணி 7க்கு திருநெல்வேலிச் சந்திப்பு தருமை மடம் அருணகிரிக் கழக மன்றத்தில் தென்னிந்திய தமிழ்ச் சங்க சார்பில் கொக்கிரகுளம் வே. நமச்சிவாயம் பி. ஏ., பி. எல்., தலைமையில் அனுதாபக் கூட்டம் நடந்தது. மறைந்த சேலம் கல்லூரித் தலைவர் இராமசாமியார் இசைத் தமிழ்ப் புலவர், திருவனந்தபுரம் அரசாங்கக் கருவூலத் தலைமையதிகாரியாயிருந்து ஓய்வு பெற்ற தி. இலட்சுமணனார், ஆகிய இரு பெரும் அறிஞர்களைப் பற்றி கு. அருணாசலம், வி. கே. முத்தையா பி. ஏ., பி. எல், ஐ. சுப்பிரமணியம் எம். ஏ., புசி. புன்னைவனநாதன், பி. எஸ். சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., வ. சுப்பையா, குரூசந்தோணி பி. ஓ. எல்., ச. சகந்நாதன் எம். ஏ. ஆகியோர் பேசினர். வருத்தம் தெரிவிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியில் கழக விரிவுரையாளர் அ. நவநீதகிருஷ்ணனும் பேசினர்.

31—8—50ல் நெற்குப்பையில் கூட்டுறவுப் பண்டகசாலையின் சார்பில் ஏற்படுத்தியுள்ள இலவச வாசக சாலையை மேலச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் ஆ. வை. இராமநாதன் திறந்துவைத்தார். அன்று மாலையில் சுந்தரம் பி., ஏ., எல். டி., தலைமையில் பொதுக் கூட்டம் நடந்தது. ஜி. கணபதி நன்றி கூறினர்.

29—8—50ல் வடக்கு நத்தம் வ. உ. சி. சவடிச்சாலை சார்பில், பாண்டுரங்கன் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் கீழ முடிமன்னார் கோட்டைப்பள்ளி ஆசிரியர் பி. சீனிச்சாமி, விருதை ரெங்கசாமி முதலியோர் பேசினர். பாலகிருட்டினன் முன்மொழிந்தும், சீனிச்சாமி வழிமொழிந்தும், வகுப்பு நீதியை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3—9—50ல் அருப்புக்கோட்டையில், நகராட்சி மன்றத் தலைவர் எம். டி. இராமசாமி தலைமையில் விருதை ந. இராமசாமி இயற்றிய "எங்கே நீதி?" என்ற நாடகம் நடந்தது. எஸ். எஸ். பழனிச்சாமி, நாடகாசிரியரைப் பாராட்டிப் பேசினர். இறுதியில் நாடகாசிரியர் நாடகத்திற்கு வந்திருந்த எஸ். எஸ். பி., சிவசண்முகசுந்தரம், சேர்மன் எம். டி. இராமசாமி, சர்க்கார் அதிகாரிகள் தியேட்டர் உரிமையாளர் என். எஸ். மணி, மற்றும் கூடியிருந்த இயக்கத் தோழர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

3—9—50 நாகை—வெளிப்பாளையம் திருவள்ளுவர் வாசகசாலையில் காலை 9 மணிக்கு எஸ். அம்மாசி தலைமையில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் சேலம் கல்லூரித் தலைவர் இராமசாமி அவர்கள் மறைவிற்கு வருந்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3—9—50 மாலை சுண்டக்காமுத்தூர் பகுத்தறிவுப் படிப்பகத் திறப்பு விழா சு. கு. தாண்டவன் தலைமையில் நடந்தது. படிப்பகத்திற்கு ஏராளமான புத்தகங்கள் தந்துதவிய வி. வி. கிரி, படிப்பகத்தைத் திறந்துவைத்தார். பழனியப்பன், பழனிச்சாமி, அரங்கசாமி மற்றும் பலரும் பேசினர்.

4—9—50ல் அ. முருகையா தலைமையில் கூடி செல்வம் நடிகமன்றம் நிறுவப்பட்டது. பொதுச் செயலாளர்:— சோ. பாண்டுரங்கன், துணைச் செயலாளர்:— கே. எஸ். மணி, பொருளாளர்:—அ. முருகையா, விளம்பர உறுப்பினர்:- பொ. பொன்ராசு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

5—9—50ல் கிருஷ்ணகிரி போர்டு உயர் நிலைப் பள்ளியில் நாராயணசாமி (அய்யர்) எம். ஏ. எல். டி.) தலைமையில் நடந்த அனுதாபக் கூட்டத்தில், இராமச்சந்திரன் பேசினர். சேலம் கல்லூரித் தலைவர் இராமசாமியார் மறைவிற்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

8—9—50ல் கிண்டி இன்ஜினியரிங் கல்லூரித் தமிழர் கழக சார்பில், உலகநாதர் தலைமையில் நடந்த கூட்டத்தில் க. அன்பழகன் எம். ஏ. "புது உலகம்" எனும் பொருள்பற்றிப் பேசினர்.

*

புதுக் கழகம்

அரிநாயகிபுரம் (கிளை)

5—9—50ல் அரிநாயகிபுரத்தில் அறிவு வளர்ச்சிக் கழகத்தில் ஆ. திராவிடமணி தலைமையில் நடந்த கூட்டத்தில் தி. மு. க. கிளை அமைக்கப்பட்டது. செயலாளர்:— போ. இராமசாமி, துணைச்செயலாளர்:- ஆ. தங்கச்சாமி, நிதி உறுப்பினர்:- ஆ. பழனிச்சாமி, விளம்பர உறுப்பினர்:- மாரியப்பன், ஏனைய செயற் குழுவினர்:- போ. பொன்னுசாமி, தங்கவேலு, பால்சாமி ஆகியோர். மாவட்டக் கழகத்திற்கு போ. இராசாமி, அ. தங்கச்சாமி இருவரையும் தேர்ந்தெடுத்தனர்.

காஞ்சி பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத் துவக்க விழா

6-9-50 மாலை 5-30 மணியளவில் காஞ்சி பச்சையப்பன்கல்லூரி மண்டபத்தில் மாணவர்கள் ஆசிரியர்கள் எல்லோரும் குழுமியிருந்தனர். தமிழ் மன்றத்துவக்குவிழாவிற்குக்கல்லூரித்தமிழ் விரிவுரையாளர் தோழர் என். சஞ்சீவி பி. ஓ. எல். (ஆனர்ஸ்) தலைமை வகித்தார். தில்லை வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்) விழா சொற்பொழிவு நிகழ்த்தினர். செயலாளர் பட்டாபிராமன் நன்றி கூறலோடு விழா இனிது முடிந்தது.

திருமால்பூரில்

—⊛—

வடாற்காடு மாவட்டத்திலுள்ள திருமால்பூர் எனும் கிராமத்தில், திராவிட முன்னேற்றக்கழக சிறப்புக் கூட்டம் 10—9—50 6-மணிக்கு, காஞ்சிபுரம் தோழர் C. V. M. அண்ணாமலை தலைமையில் சிறப்புற நடைபெற்றது. திருமால்பூரில் இளைஞர்கள் பலர், தி. மு. கழக ஆர்வம்மிக்கவர்களாய் உள்ளனர். அன்றைய கூட்டத்தை விழாபோல விமரிசையாக ஏற்பாடு செய்திருந்தனர். ஊர்ப் பெரியவர்களும், தி. மு. கழகத்தின் பகுத்தறிவுப் பிரசாரத்தை வரவேற்று ஒத்துழைத்தனர். காஞ்சிபுரம் தோழர்கள் பெருமாள், சபாபதி, எதிராஜ் ஆகியோர், கூட்டத்தின் சிறப்புக்காகப் காப் பணியாற்றினர். அரக்கோணம், காவேரிப்பாக்கம், ஆற்காடு ஆகிய ஊர்களிலிருந்து கழகத் தோழர்கள் வந்திருந்தனர். திராவிடர் இயக்கத்தைப்பற்றிக் காங்கிரசாரும் வைதீகர்களும் கிளப்பிவிடும் தப்புப் பிரச்சாரங்களுக்குத் தக்க பதிலுரையும் திராவிட இயக்கத் திட்டங்கள் பற்றிய விளக்க உரையும் கேட்டு திருமால்பூர் பொது மக்கள் விழிப்பும் புத்துணர்ச்சியும் பெற்றனர். அலங்காரமான மேடையும், தோரணங்களும் போடப்பட்டு, ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. திராவிடர் இயக்கப் பண்கள் பாடப்பட்டன. திராவிடச் சமுதாயத்தின் விடுதலையே எங்கள் குறிக்கோள்—அந்த விடுதலைக்கான வழிகளே எங்கள் திட்டங்கள்—என்று, தோழர்கள் E. V. K. சம்பத், K. R. ராமசாமி, C. N. அண்ணாதுரை ஆகியோர் விளக்கிப் பேசினர். இயக்க அன்பர்களின் விருந்துபசாரத்துடன் அன்றைய நிகழ்ச்சி முடிவுற்றது. காவேரிப்பாக்கம், ஆற்காடு, ஆகிய ஊர்களிலிருந்து வந்த தோழர்கள் ஊரில் கூட்டம் நடத்தவேண்டும் என்று அன்புடன் அழைத்தனர். ஆற்காடுக்கு அடுத்த மாதம் வருவதாக C. N. A. கூறினர். சிறுதூரல் இருந்தும் மக்கள் திரண்டு விட்டனர். மழையும் ஓய்வு கொண்டது. கூட்டம் சிறப்புற பத்துமணி அளவுவரையில் நடைபெற்றது.

"திராவிட நாடு"

தனி மலர்

திராவிட முன்னேற்றக்கழக முதலாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, "திராவிட நாடு" தனி மலர், 24—9—50ல் வெளியிடப்படும்.

*

ஓராண்டுப்பணியினைத் தொகுத்துப் பார்த்துப் பூரிப்படைய ஓர் வாய்ப்பு!

*

முன்னேற்றக் கழகம், நாட்டிலே எங்கெங்கு தழைத்திருக்கிறது என்பதை அறிந்து அக மகிழ ஓர் வாய்ப்பு!

*

நாட்டினர் முன்உள்ள பிரச்சினைகளைப் பற்றி முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள கருத்தினை அறிந்திட ஓர் வாய்ப்பு!

*

அறிவுப் பிரசாரப் பணி தங்கு தடையின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது எனவே நாட்டின் விடுதலையைப் பெற முடியும் என்ற நம்பிக்கையைப் பெறஓர்வாய்ப்பு!

*

"திராவிட நாடு"—தனி மலர் இந்த வாய்ப்பாக அமையும்.

*

ஓராண்டு இயக்கப்பணியின் தொகுப்பு ஏடு—முன்னேற்றக் கழகத்தினர் ஒவ்வொருவரும் பெற்றுப்பயன் பெறவேண்டுகிறோம்.

*

படங்கள்—கவிதைகள் — கதைகள்— கொண்டதாக மலர் திகழும்.

*

டிம்மி 50 பக்கங்களுடன், அழகிய மேலட்டையுடன் மலர் வெளிவரும்.

விலை 0—8—0

எவ்வளவு இதழ் தேவை என்பதை உடனே எழுதி அனுப்புக.

கழகச் செய்திகள்

மேலூர்

14—8—50-ல் மேலூர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் எல்லோரும், சமூக நீதி வேண்டும் என்று வற்புறுத்துவதற்காக பள்ளிக்குச் செல்லாமல், பகல் 2 மணிக்கு ஊரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் நடத்திச் சென்றனர். ஒரு சைக்கில்படையும் ஊர்வலத்திற்கு முன்பாக அணிவகுத்துச் சென்றது. 3-15 மணிக்கு ஆதி நாராயணன் என்ற பிராமணத் தோழர் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பலர் பேசினர்.

கொண்டயம்பட்டி

31—8—50 இரவு 8 மணிக்கு சு. பெ ரா. மலைச்சாமி தலைமையில் தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம் நடந்தது. இவ்வாண்டுக்கு புது நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:— சு. பெ. ரா. மலைச்சாமி, உதவிச் செயலாளர்:— பெ. பழனிச்சாமி, பொருளாளர்:- பெ. அருணசலம், விளம்பரச் செயலாளர்:— சி. சி. பாலுச்சாமி,—அ. இராமலிங்கம், சு. பொன்னுச்சாமி, பெ. கன்னியப்பன், மா. இராமு, சோ. வெள்ளைச்சாமி, பெ. பெரியசாமி, கோ. ஆறுமுகம், பெ. பெருமாள், பெ. சின்னச்சாமி, பொ. தனிக்கோடி, சு. பெ. ரா. கருப்புச்சாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்கள். கழக நடவடிக்கைகள் குறித்து அ. இராமலிங்கம், சோ. வெள்ளைச்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சங்கரநயினர் கோவில்

1—9—50 இரவு 8 மணிக்கு இராசேந்திரன் தலைமையில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் ம. அருள்சாமி இயக்கக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். பிறகு என். சங்கரன் விளம்பர உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பொதுச் செயலாளர் நெல்லை மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்யும்பொழுது, நகரில் கூட்டம் நடத்தவேண்டியிருப்பதால் ஒரு நிதி வசூல் கமிட்டி நியமிக்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி

2—9—50-மாலை 6-மணிக்கு ஸ்ரீதரன் சினிமா வெளியில், தி. மு. க. சார்பில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரால் "காந்தி மகான் கதை" "கிந்தனர்" காலட்சேபம் நடத்தப்பட்டது. ஆயிரக் கணக்கில் மக்கள் குழுமியிருந்தனர்; நிகழ்ச்சி இரவு 10-மணிவரை நடந்தது. தி. மு. க. சார்பில் கலைவாணர் என். எஸ். கே. புளிமூட்டை இராமசாமி, டி. எஸ். துரைராஜ் ஆகியோருக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. இன்னும் பல கழகங்களின் சார்பில் வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. மலர்மாலை யணிவித்தனர். வசூலான தொகையில் செலவுபோக மிகுதியை தி. மு. க. வளர்ச்சிக்குப் பயன் படுத்துவதென அறிவிக்கப்பட்டது. இறுதியில் குமாரதணிகாசலம் எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார்.

அம்மாபேட்டை (சேலம்)

3—9—50 இரவு 7—30-மணிக்கு தி. மு. க. செயற்குழுக் கூட்டம் அப்துல் ரஹீம் தலைமையில் நடந்தது. சேலம் கல்லூரித் தலைவர் இராமசாமி அவர்கள்மறைவிற்கு வருந்தியும், அக்டோபர் மாதத்தில் கழக முதலாவதாண்டு நிறைவு விழா நடத்துவது எனவும், விழாவிற்கு சி. என். ஏ., மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இரா. நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு, டி. கே. சீனுவாசன், கே. எ மதியழகன் ஆகியோரை அழைப்பதெனவும், விழா செலவிற்குப் பொது மக்களிடம் நன்கொடை வசூலிப்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

கிருஷ்ணகிரி

4—9—50ல் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் இவ்வாண்டுக்குரிய புது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:- ஆர். வெங்கடாசலம், துணைச் செயலாளர்:- ஆர். ஏ. கமால், ஆர், வெங்கடராசலு, பொருளாளர்:- ஆர். கேசவன், விளம்பர உறுப்பினர்:- எம். ஏ. சாரியா, இன்னும் பதின்மர் செயற்குழுவினராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். வெங்கடாசலம், சந்திரன் ஆகியோர் மாவட்ட உறுப்பினர்கள் எனத் தீர்மானிக்கப்பட்டன.

மருதானை (கொழும்பு)

3—9—50ல மாலை 5 மணியளவில் தி.மு.க. திறப்புவிழா பெ. பொன்னையா தலைமையில் நடந்தது. சிவராமன் திராவிடப்பண் பாடினர். கழகத்தை சு. பெருமாள் திறந்துவைத்தார். பீ. டி. பாலையா, சி. என்.எ. படத்தை திறந்துவைத்தார். அந்தோனி, வி. ஆர். பாண்டியன், ஆர். ஏ. மணி. சோமசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். எம். ஏ. முனிசாமி பொதுச் செயலாளராகவும், வி. ஆர். பாண்டியன் துணைச் செயலாளராகவும் ஆர். ஏ. மணி சட்டதிட்டக் குழுச் செயலாளராகவும், எம். சேது, நிதிக் குழுச் செயலாளராகவும், வீ. பி. பொன்னையா பிரச்சாரக்குழு செயலாளராகவும், இருந்து பணியாற்றவேண்டும்எனமுடிவு செய்யப்பட்டு பெருத்த கைதட்டுதலிடையே அறிவிக்கப்பட்டது.

ஆர்க்காடு (வ. ஆ.)

5—9—50ல் தி. மு. க. சார்பில் த பொன்னம்பலம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் இளங்குப்பன் பேசினர். வலுக்கட்டாயமாக, திடீரென வீடுகளிலிருந்து தானியங்களை எடுத்துச் சென்ற தானிய சேகரிப்பு அதிகாரிகளை கண்டித்தும், வியாபாரிகள் விலைகளை ஒரே மாதிரியில் நிர்ணயித்து விற்கும்படி வேண்டியும், அரிசி ஆலைகளை வழக்கம்போல வேலை செய்யவேண்டும் என்றும், தினமணி, பாரததேவி, சுதேசமித்திரன் ஆகிய ஏடுகள் ஆர்க்காட்டைக் குறித்துக் கேவலமான செய்திகளை வெளியிட்டதற்காக அவைகளைக் கண்டித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

திருவனந்தபுரம்

8—9—50 இரவு 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடந்த தி. மு. க: செயற்குழுக் கூட்டத்தில், மத்தியக்குழுவின் தீர்மானபபடி, கொச்சி, திருவாங்கூர் பகுதிகளில் இரயில்வேபோர்டுகளில் இந்திக்கு அளிக்கப்படும் முதலிடத்தில் திராவிட மொழிகளொன்றும், அந்தப் பிரதேச மொழியாகிய மலையாளத்திற்கு இடம் அளிக்கவேண்டும் என்றும், தடைசெய்யப்பட்ட புத்தகக் கருத்துகளைத் துண்டுப் பிரசுரங்களைத் துண்டுப்பிரசுரங்கள்மூலம் வெளியிடுவதென்றும், இன்றுள்ளஉணவுப்பஞ்சத்தைத் தவிர்க்கவெளியிடங்களிலிருந்து உடனடியாக இறக்குமதி செய்யவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திண்டுக்கல்

10—9—50 காலை 10 மணிக்கு ரெட்டியார் சந்து 2-ம் எண் இல்லத்தில் கழகச் செயற்குழுக் கூட்டம், கோ. இலட்சுமணன் தலைமையில் நடந்தது. கழகக்கட்டுப்பாட்டை மீறிநடந்த மா. தங்கவேலரை பிரச்சாரக்குழுவிலிருந்து நீக்கிவிட மத்யக்கழகத்துச் செயற்குழுவை வேண்டியும், 17—9—50ல் நடத்தவேண்டிய 'திராவிடநாள்' விழாவை அன்றே நடத்துவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

10—9—50 மாலை 6 மணிக்கு தி. மு. க. சார்பில் ஜி. இலட்சுமணன் தலைமையில் நடந்த 'திராவிடநாள்' பொதுக்கூட்டத்தில் விருதைசெந்திக்குமார் நாடார் கல்லூரித் தமிழாசிரியர் திருமாறன், க. அன்பழகன், எம். ஏ. பேசினர். முத்து நன்றி கூறினர்.

அன்று இரவு 10 மணிக்கு எம். ஆர். இராமசாமி கோஷ்டியாரால் "பார் குற்றவாளி" என்னும் நாடகம் நடத்தப்பட்டது.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், ஈரோடு.

2—9—50 காலை 10 மணி யளவில் எஸ். ஆர். சந்தானம் மண்டியில் தி. மா. மு. கழகம் அமைக்கப்பட்டது. முருகேசன், சோமசுந்தரம், எல். அப்பாவு, கந்தசாமி பேசினர்.

செயலாளர்:— சோமசுந்தரம், உதவிச் செயலாளர்:— நடராசன், பொருளாளர்:—கந்தசாமி, விளம்பர உறுப்பினர்:- சிதம்பரம், முருகேசன், தப்புராஜ், அலக்சாண்டர், தர்மலிங்கம், வெங்கட்ட பெருமாள், அருணசலம், டி. அருணசலம், ஸ்டேன்லி, எம். ராசையா, சண்முகம், ரகுபதி ஆகியோர் செயற்குழுவினர்.

திருத்தம்

20—8—50 இதழ் 4-ம் பக்கத்தில் கம்பூனல் ஜி. ஓ. எளர்ச்சி குறித்து 'காஞ்சியில்' என்ற தலைப்புடன் வந்த செய்தியில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் பெயர் பட்டியலில் எம். சண்முகம் என்றிருப்பது திராவிட கழகத் தோழர் என்றும், திராவிட கழகத் தோழர்கள் வரிசையில் சபாபதி என்றிருப்பது திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் என்றும் இருக்க வேண்டும்.

கோவையில்
24—9—50
மாலை
பொதுக் கூட்டம்
சி. என். அண்ணுதுரை
பேசுவார்.

உப்புத் தொழிலாளர் போராட்டம்

கே. வி. கே. சாமிமீது அடக்குமுறை

தூத்துக்குடியில் 'சுயராஜ்யம்!'

தூத்துக்குடியில் இந்த வாரம் பெரிய பரப்பரப்பை ஏற்படுத்திவிட்டது, நாளுக்கு நாள் வளர்ந்து வரும் உப்புத் தொழிலாளர் பிரச்சினை —இப்பொழுது உப்பின் விலை மணங்கு ஒன்றுக்கு ரூபா. 0-12-6 அதிகம் விற்று வருவதால் தொழிலாளிகள் தாங்கள் இப்பொழுது பெற்றுவரும் கூலி ரூ 1-14-0 போதாதென்றும், ரூ.2—2—0 ஆக உயர்த்தவேண்டும் என்றும் கேட்டுவந்தனர். உப்புத்தொழில் முதலாளிகள் இதற்கு இணங்கவில்லை. தொழிலாளிகளின் கோரிக்கையைத் தள்ளிவிட்டு, அவர்களை மிரட்டியும், திட்டியும் அடக்கிவிடலாம் என்று எண்ணி அந்தத் திருப்பணியிலே ஈடுபட்டிருந்தனர்!

3—9—50ல் வயது முதிர்ந்தும், உணர்ச்சி குன்றாத உப்புத் தொழிலாளத் தோழர் கருமலையார் என்பவர், திடீரெனத் தாக்கப்பட்டார். அவர் உடலெங்கும் அரிவாள் வெட்டுகள் — தொழிலாளப்பிரச்சினையில் தீவிரமாக ஈடுபட்டதற்கு அவர் பெற்ற பரிசுகள், அரிவாள் வெட்டுக் காயங்கள்.

5—9—50ல் எந்த முன்எச்சரிக்கையுமின்றி காரணம் எதுவுமே காட்டாமல், உப்புத் தொழிலாளர் சங்கத் தலைவர் கே. வி. கே. சாமியையும், சேவத்தபாண்டியன்என்ற மற்றொரு தோழரையும் போலீசார் கைது செய்தனர். காட்டுத்தீயென இச்செய்தி, உப்பளங்களிலே வேலைசெய்துகொண்டிருந்தவர்களிடையே, பரவியது. ஆண்கள்,பெண்கள், குழந்தைகள்—எல்லோரும், சுமார் 10, 000 தொழிலாளர்கள் ஊர்வலமாக புறப்பட்டுவந்து போலீசார் நிலையத்தைச் சுற்றி நின்று 'எங்கள் தலைவர் கே. வி. கே. சாமியை விடுதலை செய்யுங்கள்' என்று முழக்கியவண்ணமிருந்தனர்.

சிறிது நேரத்திற்குள்ளாகவேஆளவந்தாரின் அடக்குமுறை தர்பார் ஆரம்பமாகிவிட்டது. தடியடித்திருவிழா நடத்தினர். பெண்கள் பலர்பெரும் அவதிக்குள்ளாக்கப்பட்டனர். வயோதிகத்தொழிலாளர் பலர் அடக்குமுறைக்கு ஆளாயினர்.

6—9—50 மாலை கைது செய்யப்பட்ட இரு தோழர்களும் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் கே. வி. கே. சாமியை ஜில்லா கடத்தி சர்க்கார் மறுஉத்தரவு கிடைக்கும்வரை நெல்லை மாவட்டத்திற்குள் வரக்கூடாது என்று கட்டளையிட்டனர்.

தொழிலாளர்கள் இன்னும் வேலைக்குத் திரும்பவில்லை.

அடக்குமுறையினல், ஆளவந்தார் பெரும் பழிக்கு ஆளாகிவிட்டனர். தாய்மார்களைத் தாறுமாறாக நடத்தியிருக்கின்றனர். தள்ளாதவயவர்களையும் இரக்கமற்ற முறையில் தாக்கியிருக்கின்றனர். அவர்கள் கஞ்சிக்கலயங்களையும், தொழிலுக்குவேண்டிய உபகரணங்களையும் தூள் தூளாகச் சிதறடித்திருக்கின்றனர்.

விளைந்த பாதகம், சொல்லிடவும் வேதனை தரும்!

இன்று தூத்துக்குடி அகிம்சாவாதிகளின் அடக்குமுறை ஆர்ப்பாட்டத்தைக் கண்டு, ஆத்திரத்தின் குடியிருப்பிடமாக மாறியிருக்கிறது. கட்சிக் கருத்து மாறுபாடுகளை, தூரத்தே விலக்கி வைத்து, மனமாச்சரியத்தை எடுத்தெறிந்துவிட்டு எல்லோரும், ஆட்சியாளரின் போக்கைக் கண்டு மனங்கொதித்து அக்னிச்சிலைகளாக மாறியுள்ளனர், சோஷியலிஸ்ட் கட்சி, தி. மு. க. இன்னும் பல சங்கங்கள் தொழிலாளர்களிடம் தங்கள் அநுதாபத்தையும், ஆதரவையும் தெரிவித்துள்ளன.

(ஓ. கி.)

திராவிடநாடு

ஞாயிறு] 17—9—50 [காஞ்சி

வெற்றிச்சிந்து

*

கருப்புக் கொடிகளைக் கண்டு, திவாகர் கவலைப்படவில்லையாம்.

அவர் அவ்விதம் சொன்னதாகப் பத்திரிகை நிருபர்கள் தகவல் தருகிறார்கள்.

கருப்புக் கொடிகளைக் கண்டு, திவாகர் என்ன எண்ணுகிறார், மருட்சி அடைகிறாரா, மனவேதனை கொள்கிறாரா, ஏன் இந்த நிலை பிறந்தது நமது கட்சிக்கு என்று ஏக்கமடைகிறாரா, என்ற கவலை நிருபர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

எனவேதான், அவர்கள், திவாகரைப்பேட்டி கண்டு கேட்டிருக்கிறார்கள், கருப்புக்கொடி காட்டினார்களே, தாங்கள் அதைப்பற்றி என்ன கருதுகிறீர்கள், என்று.

நிருபர்கள், திவாகரைச் சூழ்ந்துகொண்டு, அவருடைய எண்ணம் என்ன என்று கேட்டுத் தெளிவு பெறவேண்டிய சூழ்நிலையை, கருப்புக் கொடிச் சம்பவம், ஏற்படுத்திவிட்டது.

“ஐயோ! நான் பயந்து போனேன்—இப்படி இருக்கும் என்று தெரிந்திருந்தால் நான் வந்திருக்கவே மாட்டேனே! என்று பீதியுடன் பேசுவாரா, ஒரு மந்திரி! எதிர்பார்க்கலாமா அப்படி அவர் பேசுவார், என்று! ஒரு சமயம் அவர் மனதிலே அதுபோல எண்ணமும் பீதியும் ஏற்பட்டிருக்கக் கூடும்—வெளியே சொன்னால் வெட்கக்கேடல்லவா—சொல்வாரா! — சொல்லத்தான் மாட்டார்—சொரணை கெட்டவர்கள்கூடச் சொல்லமாட்டார்கள்—பதவியில் இருக்கும் ஒரு மந்திரி சொல்வாரா?

கவலைப்படவில்லை — என்றுதான் கூறுவார். அதுதானே மதியூகி கூறக்கூடிய பேச்சு!

அவர்மீது, பாபம், குற்றமில்லை— அவரிடம் சென்று கேள்வி கேட்டார்களே, நிருபர்கள், என்ன எண்ணுகிறீர் என்று—அவர்கள், இலேசான பேர்வழிகளல்ல! மந்திரியை ஒரு கணம், திணறவைத்து விட்டார்கள்!

நிருபர்கள் ஏன் கேட்டார்கள்
அந்தக் கேள்வியை?

கருப்புக்கொடி காட்டுவது என்பது கவலை உண்டாக்கக்கூடிய சம்பவம் அல்லவானால், அந்தக் கேள்வி கேட்கவேண்டிய அவசியமே எழாது.

கருப்புக்கொடி காட்டினவர்கள் ‘ஏனோதானோக்கள்’ ஆக இருந்திருந்தால், திவாகரைப் பேட்டி கண்டு, நிருபர்கள், கேள்வி கேட்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிராது.

காட்டப்பட்ட கருப்புக்கொடிகளும், மிக மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ளதாக, இங்கொன்று அங்கொன்றாக இருந்திருந்தால், நிருபர்கள் ஓடோடிச் சென்று, திவாகரைக் கண்டு, என்ன எண்ணுகிறீர்கள், என்று கேள்வி கேட்டிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிராது!

கருப்புக்கொடி காட்டுவது முக்கியமான சம்பவம், திராவிடரின் உரிமை உணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு,—அதற்கான தீர்மானம் செய்த கட்சியும், மக்கள் மன்றத்திலே மாண்புடன் உள்ளது—காட்டப்பட்ட கருப்புக் கொடிகளும் ஏராளம்—அதுபோது இருந்த எழுச்சியும் உள்ளத்தை உருக்கக்கூடியது—எனவேதான், நிருபர்கள், திவாகரைக் கேட்டிருக்கிறார்கள், என்ன எண்ணுகிறீர் ஐயா!—என்று. மந்திரியும் நிருபர்களும் கூடிப் பேசவேண்டிய சூழ்நிலையைக் கருப்புக்கொடிச் சம்பவம் உண்டாக்கிவிட்டது.

பலமான அடியோ? — என்று ஒருவரைப் பார்த்து இன்னொருவர் கேட்கிறார் என்றால், என்ன பொருள்? — கீழே விழுந்திருக்கிறார்—அல்லது கலகத்தில் சிக்கியிருக்கிறார் — ஏதோ ஒருவிதமான விபத்து, என்றுதானே பொருள்.

ஒரு காரணமுமின்றி, ஒரு நிகழ்ச்சியுமில்லாத போது, ஒருவர், இன்னொருவரைப் பார்த்து, பலமான அடியா? என்று கேட்பார்.

அதுபோலத்தான், திவாகரைப் பார்த்து நிருபர்கள், என்ன உமது கருத்து இந்தக் கருப்புக் கொடிச் சம்பவத்தைப் பற்றி, என்று கேள்வி கேட்டதற்குக் காரணம், பலமாக இருக்கிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

★ விழித்தெழுந்த திராவிடத்தின் வெற்றிக் காட்சி! ★

டில்லி தர்பாரை எதிர்த்து அறப்போர்

சென்னையில் கருப்புக்கொடி நாள்

பருந்துகள் பறந்தன! | ‘கருப்பு’ மழை பெய்தது

வெள்ளம்போல் வீரர் கூட்டம்

பருந்துகள் பறந்தன! பலூன்கள் வானத்தில் வட்டமிட்டன!!

கார்மேகங்கள், வானத்தினின்றும் வந்துவிட்டனவோ! கருநிறக் கடல்தான் வந்துவிட்டதோ! கருப்பு தன் பெயரின் பொருள் தெரிய புறப்பட்டு வந்ததோ! காணாத காட்சி, இது, கனவோ நனவோ! மேகங்களுக்கு மத்தியில்தான் நாம் சிக்கி விட்டோமோ? தோளசைத்து அங்கு, தூக்கும் கரங்கள் யாவும் கடலின் அலைகளோ! அங்கிருந்து எழும்பும் கர்ச்சனை கார்மேகங்களின் இடி முழக்கமே தானோ! என்று கண்டோர் வியக்கும்படி காட்சி தந்தது 9—9—50-அன்று சென்னை மாநகர்.

“வடநாட்டு ஆதிக்கம் ஒழிக” என்ற இதயபேரிகை, போர்க்கோலம் பூண்டுவிட்டோம்! என்பதுபோல முழங்க, “திவாகரே திரும்பிப்போ” என்ற வீரமுழக்கம் விண்ணெல்லாம் நிறைய, “திராவிடநாடு திராவிடருக்கே” என்ற இதயகீதம் காற்றிலெல்லாம் கலந்தது!

காளைகள், மாண்ட பாண்டிய மன்னர்கள் மீண்டது போலக் கூடிக்கிடந்தனர். “பாசறை இது பாராய்—பாயுமோ ஈட்டி எமக்கு நேராய்” என்று கேட்பதுபோல, வரிசை வரிசையாக அவர்கள் அணிவகுத்து நின்ற காட்சி, கண்ணிரண்டும் போதவில்லையே, என்று கலங்கச் செய்தது! அரும்பு மீசை, துடிக்கும் இளமை, துயரஞ்சாப் பருவம், தூங்காப் புலிகளாம் மாணவ மணிகள் மங்காப் புகழுறு தமிழ் வீரத்தின் விடிவெள்ளிகள் என்று அறிவிப்பது போலத் திரண்டிருந்தனர்!

“வேலும் வாளும் ஒருபோது எங்கள் கையில் விளையாடினவைதான்—இன்று தோலும் எலும்புமாய்த் தோற்றமளிக்கின்றோம். கருப்புக்கொடி ஏன்? எங்களையே காட்டினால் போதுமே” என்று எச்சரிப்பது போல, எண்ணிலடங்காத் தொழிலாளர்கள் அங்கே, அலைகடலைப்போல அசைந்து கொண்டிருந்தனர்! “களங்கண்டுத் துள்ளிக்குதிக்கும் வெற்றிச் செல்வங்களின் வீரத்தாய்மார்கள் நாங்கள் — புறநானூற்றின் புகழ்ச்சித்திரங்கள்”! என்று, வீரத்தை நாட்டுக்களிக்கும் வீராங்கனைகள் அங்கு, தமிழின் சின்னங்களாகக் கூடிக்கிடந்தனர்!

வெள்ளுடை வேந்தன் தியாகர் திருநகர் 9—9—50 அன்று மாலை கேடுகெட்டுச் சீரழிந்து, சிதைந்து உருக்குலையும் திராவிட சமுதாயத்தின் நிலை இது பாரீர்! என்று எதிரொலிப்பதுபோல ‘கருப்பாக’க் காட்சி தந்தது.

எதுவும் செய்வோம்

பத்து நாட்கள் கூட ஆகவில்லை, வடநாட்டாதிபத்திய மந்திரிகளைப் பகிஷ்கரிப்பது என்ற தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு கோவில்பட்டியில் முடிவு செய்து—கழகத்தின் கிளர்ச்சி முடிவு, நாடெங்கும் பரவக் கூட வழியில்லை, நமக்கு. இந்த இக்கட்டான நேரத்தில் திவாகர் — ஒரு வடநாட்டு மந்திரி வருகிறாரே! கருப்புக் கொடிப் பிடிப்பது குறித்து — மக்களுக்குத் தெரிவிக்க தினசரிகூட இல்லையே! எப்படி நமது திட்டங்களை, அப்போதைக்கப்போது அறிவிக்க முடியும்? ஆகுமா இது? நியாயத்தைையேந்தி நெஞ்சில் நேர்மையோடு புறப்பட்டாலும் வஞ்சகத்தால் நம்மை வீழ்த்த நினைக்கும் பொல்லாதோர் மத்தியிலன்றோ, கிடக்கின்றோம்! ஒரு பத்திரிகை கூட நமது செய்திகளை அறிவிக்க இல்லாது தவிக்கிறோமே! என்று கழக முன்னணி வீரர்கள் கலங்கியதையெல்லாம் கானல் நீராக்கிக் காட்டிற்று—மக்கள் தியாகராய நகர் நோக்கித் திரள் திரளாக வந்து கூடிய காட்சி!

பகல் ஒரு மணிக்கெல்லாம், சென்னை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தெல்லாம் படை வீரர்கள் எதிரி முகாமை முற்றுகையிடச் செல்வது போல, மக்கள் தியாகராயநகர் தட்சணபாரத இந்திப் பிரச்சார சபையின் முன் கூடிக்கொண்டே இருந்தனர்!

தினசரி இல்லாத குறையை நிவர்த்திப்பது போல, ‘கருப்புக்கொடி காட்டப் போகிறோம்’ என்பதை, நகரெங்கும், விதவிதமான சுவரொட்டிகள் மூலம் [illegible]ளம்பரப்படுத்தியிருந்தனர், சென்னை மாவட்ட திரா[illegible] முன்னேற்றக் கழகத்தார். பல்வேறு நிறங்களில், பல[illegible]கைகளில் அச்சிட்டு ஆங்காங்கே ஒட்டியிருந்த சுவ[illegible]கள் மயிலாப்பூர், திருவல்லிக்கேணி முதலிய இடங்க[illegible]ள கழகத் தோழர்கள் கையால் எழுதி ஒட்டியிருந்த [illegible]ட்டிகள், இவைகள்தான். — எனினும் பத்தாயிரக்[illegible] மக்கள் தியாகராய நகரில் திரண்டிருந்தது, வடநாட்[illegible]யின்மீது தென்னாட்டில் வளர்ந்து வரும் அதிருப்தி[illegible]ட்டியது.

பிற்பகல் 3-30க்குள்ளாக பல ஆ[illegible]க்கணக்கான மக்கள், இந்திப் பிரச்சாரசபைக்கு [illegible] குழுமிவிட்டனர்.

இந்திப் பிரச்சார சபையின் வா[illegible] முன் டாக்டர் தருமாம்பாள், அலமேலு அப்பா[illegible]லர்முக, தம்மையார், பாப்பம்மாள், இலட்சு[illegible]மையார், கண்ணத்தாயாரம்மாள், தமிழரசி, கோகி[illegible], லோக நாயகி முதலாய வீராங்கனைகளும். தோழர்[illegible]த்தாம்பளையம் பழனிச்சாமி, சேலம் சித்தையன், [illegible] புலவர் கே. ஆர்.ராமசாமி, இரா. நெடுஞ்செழியன், [illegible]ருணாநிதி, அழகரடி முத்து, அருப்புக்கோட்டை எ[illegible]. இராம சாமி, என். வி. நடராசன், ஈ. வி. கே. சம்ப[illegible]ஞ்சி. மணிமொழியார், குறிஞ்சிப்பாடி, சாம்பசிவம், [illegible]. லிங்கம், கே. ஏ. மதியழகன், கா. அப்பாதுரையார், கோவிந்சாமி, டி. என். ராமன், ஈழத்து அடிகள், [illegible] நாராயணசாமி, சி. பஞ்சாட்சரம், சி. வி. எம். அ[illegible], காஞ்சி சேது, கே.டி.எஸ். மணி, கிருஷ்ணமூர்த்தி, [illegible]ரமணி யம், சம்பந்தம், இராசாபாதர் காஞ்சி. கலிய[illegible] புட்டா சாமி, காஞ்சி கவுன்சிலர் சி. வி. ராசகோப[illegible] [illegible]ந்செழியன், கல்லக்குறிச்சி தணிகாசலம், [illegible]தின[illegible] சேஷாசலம், வீரராகவன், சி. வி. ரா[illegible]பிரான், சிவஞானம், எ. கே சாமி, கண்ணதாசன், [illegible]வேலன், தில்லை. வில்லாளன், இராம. அரங்கண்ண[illegible]ந்திருந்த நூற்றுக்கணக்கான முன்னணி வீரர்களில் [illegible] பெயர்கள் தான் தரப்பட்டுள்ளன. பிறருடைய விபர[illegible]த்ததும், வெளியிடப்படும்.) முதலாய இயக்க வீ[illegible]ம் அணிவகுத்து நின்று ‘வடநாட்டாதிபத்தியம் [illegible]’ ‘திராவிடநாடு திராவிடருக்கே,’ ‘திவாகரே திரும்பி[illegible]’ என்று வெற்றி முழக்கம் எழுப்பிய வண்ணம் இ[illegible].

மவுண்ட்ரோடு சர்க்கார் மாளிகைக்கு[illegible]ணிவகுத்து நின்ற ஐந்து வரிசைகளில் ஒன்றின் பகுதி. நடை[illegible]ரோடு தாய்மார்கள் நிற்கின்றனர்.

கண்கொள்ளாக் காட்சி

வெள்ளம்போல் கூட்டம்; எனினும், [illegible]ய நகரில் நிலவிய கட்டுப்பாடும் ஒழுங்கும்—மிக[illegible]ப்பிடத்தக்கவை. நடுவில், வடநாட்டு மந்திரி செ[illegible]ழிவிட்டு, இருமருங்கும் வரிசையாக அவ்வளவு ம[illegible]ம் அணிவகுத்து நின்றகாட்சி, திராவிட சமுதா[illegible]ஏற்பட்டிருக்கும் கடமை யுணர்ச்சியைக் காட்டியது. வீண் கூச்சல்களோ, ஆத்திரமூட்டக்கூடியசிறுசெயலோ எதுவும் இல்லாது, கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருந்த ஆயுதப் போலீசாருக்கு அல்லதுபோலீஸ் பட்டாளத்திற்கோ சிறிதுகூட தொந்திரவு இல்லாது, அவ்வளவுஆயிர மக்களும்நடந்துகொண்ட முறை போற்றத்தக்கதுமட்டுமல்ல — திராவிட இயக்க வரலாற்றின் ஒரு பொன்னேட்டு அத்தியாயம் என்று கூடச் சொல்லலாம்.

களத்தில் பொதுச் செயலாளர்

மாலை 3-45 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை, களத்திற்கு வந்து வீரர்களின் அணிவகுப்பைப் பார்வையிட வந்தார். அவரது வருகை, ஓய்ந்து ஓய்ந்து அடித்த சூறாவளியைப் பெரும் புயலாக்கிற்று! ஆர்வத்தோடு ‘வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம்!’ ‘ஒழிக வடநாட்டு ஆதிபத்தியம்’ என்று பேரொலி எழுப்பினர். “கட்டளையைநிறைவேற்றுகிறோம்,கட்டுப்பாட்டோடு,! பொறுத்தது போதும்—இனி எங்களைப் புறப்படச் செய்யுங்கள் ‘ஆதிபத்திய’புரி நோக்கி!” என்றுவீரஉறுதி தருவதுபோலிருந்தது, பொதுச் செயலாளரைக் கண்டு பூரித்து நின்ற வீரர்களின் ஆரவார அணிவகுப்பு.

பொதுச் செயலாளர், கூடிக்கிடந்த வீரப் பரம்பரையின் வெற்றிச் சித்திரங்களுக்கு புன்சிரிப்போடு தனது அன்பை, வணக்கத்தின்மூலம் தெரிவித்துக்கொண்டே, படை வரிசையைக் கடந்து இந்தி பிரச்சார சபையின் வாயிலுக்கு வந்தார்.

திராவிடப்போர் எழுச்சியில் உந்தப்பட்டு கூடியிருந்த மக்கள் கூட்டத்தால் தியாகராயநகர் பனகல்பார்க், பாண்டிபஜார், ராகவய்யாரோட், வெங்கடநாராயணரோட் போன்ற பகுதிகளிலெல்லாம் போக்குவரத்து தேங்கித் தடைப்பட்டது.

போலீஸ்

கட்டுப்பாடு என்ற வாள்-கடமையுணர்ச்சிஎன்ற கேடயம் ஆகியவைகளைத்தாங்கி அமைதியான முறையில் அறப்போர் நடத்திய அங்கு,காங்கிரஸ் ஆட்சியின் ‘தர்பாரை’ நிரூபிப்பதுபோல ஆயுதந் தாங்கிய போலீசார் லாரிகளில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருந்தனர்.

நகர போலீஸ் அதிகாரிகளும் வந்திருந்தாலும் அவர்கள் சிறிதுகூட சிரத்தை எடுத்துக்கொள்ளும் அவசியத்தை உண்டாக்காமல், கழக முன்னணி வீரர்கள் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

வந்தார்! திகைத்தார்!!

இரு பக்கத்திலும் திறந்த துப்பாக்கிகளோடு, ‘சுடு’வதற்குத் தயாரான முறையில் நீட்டிப் பிடித்துக் கொண்டிருந்த போலீஸ் ஜீப் முன்னே செல்ல—பின்னே அதைத் தொடர்ந்து மலபார் விசேஷ போலீஸ் வர, நடுவே டெல்லி மந்திரி திவாகரின் கார் வந்தது. தோழர் திவாகருக்குப் பக்கத்தில் சென்னை மீராமத்து இலாகா, விளம்பர இலாகா ஆகியவைகளை நிர்வகிக்கும் அமைச்சரான பக்தவத்சலம் அமர்ந்திருந்தார். அவர்கள், கார், பாண்டி பஜாரிலிருந்து இந்திப் பிரச்சார சபைக்குச் செல்லும் ரோடில் திரும்பியதுமே, மக்கள் ஆர்ப்பாட்டம், ஆரம்பமாகிவிட்டது. கருப்புக் கொடிகள்—தோன்றுவதைக் கண்டு திகைப்புடன் பார்த்த திவாகரின் கார், மக்கள் மத்தியில் வந்ததும் வேகமாகச் செல்லலாயிற்று!

பறந்தன பருந்துகள்!

கழுத்திலே கட்டப்பட்ட கருப்புக்கொடியுடன், கூட்டத்தின் மத்தியிலிருந்து வானை நோக்கி பருந்து ஒன்று பறந்தது! அதைத் தொடர்ந்து பல மூலைகளிலிருந்தும் பருந்துகள் ‘விர்’ரென்று கிளம்பின! சிறகடித்து எழும்பிச் சென்றபோது கட்டிவிடப்பட்ட கருப்புக்கொடி, காற்றிலே அடித்துக்கொண்ட காட்சி, ‘வடநாட்டு ஆதிபத்தியமே விரைவில், உன் கதியும் இதுதான்’ என்று எச்சரிப்பது போலிருந்தது. ‘திவாகர் வந்துவிட்டார்’ என்று தெரிந்ததும், கூட்டத்தினரிடையிலிருந்து கருப்பு நிற பலூன்களும் வானை நோக்கி எழும்பிச் சென்றன!

மக்களின் ஆரவாரமோ, எல்லையைக் கடந்துவிட்டது. வெற்றி முழக்கங்களை முழக்கிய வண்ணம், ஆவேசத்தோடு கருப்புக் கொடிகளைத் தூக்கிப் பிடித்து ‘திவாகரே திரும்பிப் போ’ என்று தமிழிலும் ‘Go-Back-Diwakar’ என்று ஆங்கிலத்திலும், தியாகராயநகரே அதிரும்படி பேரொலி எழுப்பினர்!

‘கருப்பு’ மழை!

உரிமைப் போரின் ஒத்திகையென்று எண்ணி ஆவேசத்தோடு கூடிநின்ற மக்கள் நடுவே டெல்லி மந்திரி சென்றபோது, ‘கருப்பு மழை’ அவர் காரினுள் பெய்தது! இருமருங்கிலும் சென்ற மக்கள் கூட்டத்திலிருந்து ‘குபீ’ரென்று சிறு சிறு கருப்புத்துண்டுகள் பொழியப்பட்டன! ‘மெகபோன்’ போல பெரிய காகிதச் சுருளைச் செய்து அதனுள் சிறு கருப்புக் காகிதத் துண்டுகளை நிரப்பி, டெல்லி மந்திரி வந்ததும், பொட்டலத்தின் ஒரு மூலையை பிரித்துவிட்டுக்கொண்டு இன்னொரு பக்கத்தை வாயால் ஊதியதும், மழைத் துளிகளைப் போல ‘விர்’ரென்று போய் விழுந்தன! இதனால், டெல்லி மந்திரி காரே நிறைந்திருக்கும் என்று கூடச் சொல்லலாம்!!



வெள்ளம்போல் வீரர் கூட்டம்—சர்க்கார் மாளிகைக்கு முன் வெற்றி முழக்கம் செய்கிறது!

பக்களின் ஏகோபித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைக் கண்ட டெல்லி மந்திரி, புன்சிரிப்போடு இருக்க முயன்றார். எனினும், அவர் இதயத்தில் எழும்பிய திகைப்பை சோகையிழந்த அவர் முகம் காட்டிற்று!

‘நான் அறிவேன்!’

டெல்லி மந்திரி கார் கூட்டச் சமுத்திரத்தைக் கடந்து, பிரச்சார சபையின் வாயில் அருகில் வந்ததும் அவர் கையில் முன் வரிசையிலிருந்த வீராங்கனைகள் கருப்புக் கொடிகளைத் தந்தனர். அதே போல இயக்க, முன்னணி வீரர்களில் சிலரும் தந்தனர் அவர் அதைப் பெற்றுக் கொண்டு ஆங்கிலத்தில் “I know enough” (உங்களைப் பற்றி வேண்டிய அளவு எனக்குத் தெரியும்) என்று கூறிக்கொண்டே சென்றார். கார் உள்ளே சென்றதும் பின் பக்கமாக அமைக்கப்பட்டிருந்த பந்தலுக்கு முன்பு நின்றுகொண்டிருந்த இந்தி பிரச்சார சபையின் நிர்வாகிகள் அவசரமாக, பரபரப்போடு அழைத்துச் சென்றனர்.

‘கொடி’ தூங்கிற்று!

இந்திப் பட்டமளிப்புவிழா துவக்குமுன்னதாகக் கொடியேற்று விழா செய்வதற்காக பிரச்சார சபைக்கு முன்னால் ஒரு கம்பத்தில் தேசியக் கொடி கட்டி ஏற்றுவதற்கான ஆயத்தங்களோடு வைத்திருந்தனர். ஆனால், கடைசிவரையில் கொடி டெல்லி மந்திரியால் ஏற்றிவைக்கப்படவில்லை. அதோடு நிகழ்ச்சிகளும் கூட குறிப்பிட்ட நேரத்தில் துவக்கப்படவில்லை.

கண்ணியக் காளைகள்

இந்திப் பிரசார சபையினுள் நின்றுகொண்டு கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தை சிலர் பார்த்துக்கொண்டேயிருந்ததோடு, பக்களுக்கு ஆத்திரமூட்டும் வகையில சிலவைரைச் செயல்களைச் செய்துகொண்டிருந்தும், கழகக் காளைகள் சிறிதுகூட ஆத்திரமடையவில்லை — அலட்சியத்தால புத்தி போதித்தனர்.

இந்தி பட்டம் வாங்குவதற்காக பெண்களும், பிறரும் சென்றபோது சிறிதுகூட ஆரவாரம் செய்யாது, அமைதியோடு அவர்கள் செல்லுவதற்கு வசதியாக ஒதுங்கி நின்று வழிவிட்டு கண்ணியத்தோடு நடந்துகொண்டனர். ‘கருப்புக் கொடி காட்டுவதே நம் கடமை’ யென்று கருதி வேறு எந்தவித ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடாமல் நேரிய முறையில் நடந்துகொண்ட கழகத் தோழர்கள் மிக்கப் பாராட்டுதலுக் குரியவர்கள்.

‘பரம்பரை’ வாசனை!

டெல்லி மந்திரி திவாகர், மாலை 5 மணிக்கு வருவதாகவே பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், நான்கு மணிக்கே அவர் அழைத்து வரப்பட்டார். முன்னதாகவே சென்றால் ‘ஏமாந்துவிடுவார்கள்’ என்ற எண்ணத்தின் பேரிலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாக விசாரித்ததில் தெரியவந்தது. ஆனால் மக்கள் 1 மணியிலிருந்தே வந்தது, ‘புறமுதுகிட்டுப் பழக்கப்பட்ட’ தந்திரசாலிகளின் திட்டத்தைத் தவிடுபொடியாக்கினர்!

ஆர்ப்பாட்டம் முடிந்ததும், பல்லாயிரக் கணக்கான மக்களும் ஊர்வலமாக மவுண்ட்ரோடு சர்க்கார் மாளிகை நோக்கிப் புறப்பட்டனர். வெற்றி முழக்கங்களோடு, கடல் எழுந்து வந்தது போலக் கிளம்பிய மக்கள் சமுத்திரத்தை நேக்கி—கலைந்து போகுமபடி தோழர் இரா. நெடுஞ்செழியன் வேண்டிக்கொண்டார். அதை யேற்று மக்கள் சிறு சிறு கூட்டத்தினராக மவுண்ட்ரோடு நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.

தியாகராயநகருக்கு கருப்புக்கொடி காட்டும் ஆர்வத்துடன் ஓடோடிச்சென்று, அங்கு டெல்லி மந்திரி 5-மணிக்கு வருவதாகச் சொல்லி 4-மணிக்கே வந்ததால், ‘ஏமாந்தோமே’ என்ற வீராவேசத்துடன் திரும்பிய மாணவத் தீரர்களும் தொழிலாளத் தோழர்களும் பெருவாரியாகவந்து மவுண்ட்ரோடு ஆர்ப்பாட்டத்தில கலந்துகொண்டனர்.

ஓரிடத்தில் மட்டுமல்ல! சர்க்கார் மாளிகைக்குச் செல்லும் சகல வழிகளிலும் கருப்புக்கொடி பிடித்தவண்ணம் காளைகள் நின்றுகொண்டிருந்தார்கள்.

ஆறு மணிக்கெல்லாம் சர்க்கார் மாளிகையில் மறைந்த சி. என். முத்துரங்கம் அவர்கள் படத்திறப்பு விழாவை, டெல்லி மந்திரி, செய்யப் போவதாக நிகழ்ச்சியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் மணி 7 ஆகியும் அவர் வரவில்லை!

இந்திப்பிரசார சபையில முன் கூட்டியே வந்தார்!

இங்கோ நேரங் கழித்தே வந்தார்!!

இருட்டிலால் கூட்டம் கலைந்து விடும் என்ற ‘அவர்களது’ எண்ணத்தில் செயல் வீரர்களான நமது இயக்கத்தவர்கள் மண் விழச் செய்தனர்.

‘டிக்கெட் பிளீஸ்!’

மறைந்த சி. என். முத்துரங்கம் காங்கிரஸ் பிரமுகர். அவரது படத்தை சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சியினர் திறந்து வைத்தனர். ஆனால், அந்த விழாவிலுக்கான ‘டிக்கெட்’ வைத்திருந்தவர்கள் பட்டுமே அனுமதிக்கப்பட்டனராம்! வேறு எவரையும் உள்ளே விடவில்லையாம்!!

தியாகராய நகரைவிட இங்கு மக்கள் கூட்டம் பல்லாயிரக் கணக்கில் அதிகமிருந்தது. அலுவலகங்கள், தொழிற்சாலைகள் ஆகிய இடங்களிலிருந்து ஏராளமான பேர் வந்து கலந்துகொண்ட வண்ணமாகவே இருந்தனர். சர்க்கார் மாளிகையிலிருந்து ‘ரவுண்ட்—டாணா’ வரையில், மக்கள் கூட்டம் அசைந்து கொண்டேயிருந்ததால், போக்குவரத்துக்கள் சங்கடத்தினூடே செல்ல வேண்டியதாயிற்று.

போலீஸ் லாரிகள்! ஆயுதம் தாங்கிய படையினர்! அதிகாரிகள்! எல்லாம் ஏராளமாக இருந்தாலும், அவர்களுக்குச் சிறிது கூட கஷ்டம் வைக்கவில்லை இயக்கத் தோழர்கள். திராவி[illegible] முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அ[illegible] லிருந்து அப்போதைக்கப்போது ஆலோசனை[illegible]

(6-ம்பக்கம் பார்க்க)

காஞ்சியில் உரிமைப் போர் முழக்கம்!

‘கருப்பு’ காண திகைப்பு

திவாகர் ‘திட்டம்’ குலைந்தது!

ஏய்த்துவிட்டோம் திராவிடரை, மாய்த்துவிட்டோம் அவர்தம் நல்வாழ்வை, சாய்த்துவிட்டோம் அவர்தம் புகழை, வீரத்தை, தீரத்தை என்று எண்ணிக் கிடக்கும் வடவருக்கு, ‘தொடங்கிவிட்டோம் போர், இதுவரை துவண்டு கிடந்த நாங்கள், அடங்கிவிட மாட்டோம், உங்கள் அடக்குமுறை ஆர்ப்பாட்டத்தைக் கண்டு!’ என்பதை கருப்புக்கொடி காட்டுவதன் மூலம் திட்டமாகத் தெரிவித்துவிடுங்கள்—வடநாட்டு மந்திரிகள் எவர் வந்தாலும், கருப்புக் கொடி காட்டி நம் வெறுப்பை அறிவித்து விடுங்கள் — என்று கோவில்பட்டியிலே கூடிய தி. மு. க. செயற்குழுவினர் திராவிடத்திற்கு போர்ச் செய்தியை அனுப்பினர்.

திராவிடத்தின் பட்டி தொட்டிகளிலுள்ள வீரரெல்லாம் விழிகளை விசாலப்படுத்தி, தினம் வரும் ஏடுகளைப் புரட்டி, வடநாட்டு மந்திரிகள் வருகிறார்களா என்றுபார்த்தவண்ணமே இருந்தனர்.

திவாகர் சென்னை வருகிறார் என்ற சேதி, தித்திப்பைத் தடவியது, திராவிடத் தீரர்களின் உள்ளங்களிலெல்லாம்!

ஆனால் அவர் காஞ்சிபுரமும் வருகிறார் என்ற திடீர்த் தகவல் 9—9—50-மாலை 5 மணியளவிலேயே அறிய முடிந்தது.

திராவிடக் காளைகள் இங்கும் அங்கும் ஓடினர். துண்டுப் பிரசுரங்கள் பறந்தன. கைகளினால் எழுதிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன — இத்தனையும் சில மணிகளில், அதுவும் ஓயாமல் பெய்துகொண்டிருந்த மழையில்!

10—9—50 அன்று காலை ஆறுமணியிலிருந்தே, காஞ்சியின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள், டெல்லி மந்திரி வருவதாக அறிவிக்கப்பட்டிருந்த வரதராசப் பெருமாள் கோவில் வெளியில் ஆயிரக் கணக்கில் கூடினர் சன்னதித் தெரு முழுவதும் மக்கள் கூட்டம், படிகளிலும், தெருத் தாழ்வாரங்களிலும் ஏராளமாகக் குழுமிக் கிடந்தனர்.

திராவிட இயக்கத் தோழர்கள் தெருவின் இரண்டு பக்கங்களிலும் அணிவகுத்து நின்றனர். கையில் கருப்புக் கொடிகளும், கருப்புத் துணிகளும் ஏந்தி, வரும் மந்திரியின் வரவை எதிர் பார்த்தபடியே இருந்தனர்.

குறிப்பிடப்பட்ட நேரம் 9-30 மணி-ஆனால் மந்திரியார் வரவில்லை. போலீஸ் படை மட்டும் வந்துவிட்டது—அதுவும்கண்ணீர் புகைப் பிரயோகம் செய்யத் தயாரான ஏற்பாடுகளுடன்!

கடைசியாக 12 30மணிக்கு மந்திரியார் வந்தார். அவர்கார் ஆலயத்தின் உள் நுழைவதற்குள் கருமேகங்கள் அசைந்தாடுவதைப்போல கருப்புக் கொடிகள் ஆடின கருப்புத் துணிகள் அசைந்தன. ‘திவாகரே, திரும்பிப் போ’ ‘Diwakar Go back’ ‘வடநாட்டு ஆட்சி ஒழிக’ திராவிட நாடு திராவிடருக்கே’ என்ற முழக்கங்கள் வானை முத்தமிட்டு, மந்திரியாரின் செவியிலே புகுந்து அவர் சிந்தையைக் கலக்க, அவர் முகம் வாட்டத்தைக்காட்டிற்று காரினுள் அசையாப் பதுமையாக அமர்ந்திருந்தார். வராத வெருஞ் சிரிப்பை இழுத்துவர, வரிந்து கட்டியும் முடியவில்லை!



காஞ்சி: வரதர் கோயிலுக்கு டில்லி மந்திரி செல்கிறார்—காத்துக் கிடந்த காளைகள் கருப்புக் கொடி காட்டி ‘வடநாட்டு ஆதிக்கம் ஒழிக!’ என எக்காளமிடுகின்றனர்!

காஞ்சி: வரதர் கோயிலுக்கு முன் காலை 8½ மணிக்கே வந்து விட்டனர், இயக்க வீரர்கள். டில்லி மந்திரி பகல் 12 மணிக்குத்தான் வந்தார். அதுவரையில், இப்படியேதான் நின்று கொண்டிருந்தனர்!

ஆலயத்திலிருந்து திரும்பி வரும்பொழுதும் கருப்புக்கொடி காட்டினர்.

இந்நிகழ்ச்சியில் தி மு. க, தி க, திராவிட மறுமலர்ச்சிக் கழகம் ஆகிய கழகங்களைச் சேர்ந்த தோழர்கள் கலந்துகொண்டனர். கலந்துகொண்டவர்களில் முக்கியமானவர்கள்:- சி. வி. எம். அண்ணாமலை, சி. பி. ராஜமாணிக்கம், செ. கோ. பெருமாள், டி. சபாபதி, சஞ்சிவி, முத்து, எத்திராஜ், ஈழத்து அடிகள், கே. டி. எஸ். மணி, ஆர். கே. மூர்த்தி, தில்லை-வில்லாளன், வெ. சம்பந்தம், சி. இராசாபாதர், மார்க்கு, எம். என். கன்னியப்பன், கே. கண்ணன், ஜே. கே. மூர்த்தி, என். வேலப்பன், ஜி வரதன், என். கோவிந்தராசன், வி. டி. திருவேங்கடம், ஆர். ஜெகன்னாதன், சி. வி. ராதாகிருஷ்ணன், கே. கோவிந்தராசன், ஏ. கே. ஷண்முகம், எம். எஸ். மணி, பொன்னம்பலம், சி. சந்தானம், எஸ். ச. அருணாசலம், ச. எஸ். மணி, வி. பாலு, கே. ஆறுமுகம், கந்தன், எஸ். மணி, சீனுவாசன். சம்பத்து, டி. வடிவேலு, பி. ஏழுமலை, கே. முருகேசன், ஆ. ராசகோபால், இ. குமாரசாமி, சின்னராசு, பி. இராமசாமி, கே. கன்னியப்பன், ச. ஷண்முகம், நாராயணசாமி, கே. சுப்பிரமணி, சி. நடராஜன், வே. பாலசுந்திரம், நாராயணசாமி, ராதாகிருட்டிணன், பி. நாராயணசாமி, எ. சாரங்கபாணி, எஸ். ரத்தினம், ஆர். ராமச்சந்திரன், எஸ். முனியப்பன், ராசு, நாகப்பன், சி கண்ணன டி. ராமானுசன், பச்சைபப்பா, அய்யம்பெருமாள், சண்முகம், ஏ, ஜானகிராமன், பரமசிவம், சி. ஆர். சந்திரன், குமாரசாமி, சுந்தரேசன், நடிகர். எம். என். கிருஷ்ணன், மாணிக்கம், இராமலிங்கம், மாதவன், எச். எஸ். அப்துல் காதர், எம். எஸ். மணி, ஏழுமலை, ஆறுமுகம், ராசமன்னார், மாயகிருஷ்ணன், சுப்பிரமணியன், மாதவன், வரதன், பூங்காவனம், ஆறுமுகம், குப்புசாமி, இராதாகிருஷ்ணன், கச்சபாலையம், வடிவேல், அரங்கண்ணல். (ஏனைய தோழர்கள் பட்டியல் பின்னர்)

குறிப்பிட்ட நேரத்திற்கு மந்திரியார் வராதது மட்டுமல்ல, வருவதாகத் தெரிவித்த ஆலயங்களுக்கும் செல்லவில்லை. மந்திரியார் வருவார் என முன்னேற்பாடுகளுடன், பூசை புரிவோர், டிரஸ்டியார்கள் காத்திருந்தும் ஏகாம்பரநாதர் ஆலயத்திற்கு போகாமலேயே சென்னைக்குத் திரும்பிவிட்டார் என்று காஞ்சி பிரபல வியாபாரி அப்பாய் செட்டியார் தெரிவித்தார்.

காஞ்சியிலே திவாகர் கண்ட கருப்புக்கொடிகள், அவர் திரும்பிய பிறகும் சிந்தனையிலே நடமிடும். அவர் தரிசித்த வரதரின் நினைப்பைவிட, வாழ்விழந்த திராவிடர் கடும் வெயிலிலும் கட்டுப்பாட்டோடு, தங்கள் வெறுப்பைக் காட்டிய முறைதான் நினைவில் வரும் என்பது மட்டும் சந்தேகமில்லை.

போர்வாள்

அடுத்த வாரம் 24—9—50-அன்று ‘போர்வாள்’ திராவிடநாடு பிரிவினை பலராக வெளிவர இருப்பதால் 17—9—50 நாளன்று வெளிவரவேண்டிய போர்வாள் நிறுத்தப்பட்டிருக்கிறது.

மானேஜர்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

தர, ஏனைய குழுச் செயலாளர்களும், பிரச்சாரகர்களும், செயற்குழு உறுப்பினர்களும், சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கிளைக் கழக நிர்வாகிகளும், வெளியூர் கழக முக்கியஸ்தர்களும்—குழுமிக் கிடந்த மக்களிடையே நின்று கொண்டு, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர்.

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் கே. கோவிந்தசாமி, மற்றும் தோழர்கள் நெடுஞ்செழியன், மதியழகன், என். வி. நடராசன், மணிமொழியார், மு. கருணாநிதி, காஞ்சி. கல்யாணசுந்தரம், சி. வி. ராசன், சி. பஞ்சாட்சரம், ஏ. கே. சாமி, சி. கணேசன், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், அழகரடி முத்து, கண்ணதாசன், அரங்கண்ணல் முதலாய பலர் முன் நின்று அமைதியைக் காத்து வீரர்களைக் கடமையிலாழ்த்தினர்.

இங்கும் தாய்மார்கள், வெற்றிக் களிப்போடு முன்வரிசையில் நின்றனர்.

“திராவிட நாடு திராவிடருக்கே!”, “வடநாட்டு ஆதிபத்யம் ஒழிக!” “திவாகரே திரும்பிப் போ!” என்ற முழக்கம், சர்க்கார் மாளிகையை ...க்கி மவுண்ட்ரோடு முழுமையும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. மக்கள் ஆரவாரத்தைக் கேட்டவண்ணம், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜ், உணவு மந்திரி ரோச் விக்டோரியா, கல்வி மந்திரி மாதவமேனன் ஆகியோர் முறையே ஒருவர் பின்னொருவராக, கார்களில் சென்றனர். அவர்களைக் கண்டபோது, வடநாட்டு ஆதிபத்யத்தை ஒழிப்போம்’ என்ற சண்டமாருத முழக்கம் எழும்பி எழும்பி அடித்தது.

இரவு 7 மணிக்கு, துப்பாக்கித் தாங்கி ‘சுடும்’ ஆயுதத்தோடு நின்ற போலீஸ் பாதுகாப்போடு டெல்லி மந்திரி திவாகர், காரில் வந்ததும், மவுண்ட்ரோடு அதிர்ந்தது — மக்களிடையிலிருந்து எழும்பிய பேரொலியால்!

திவாகரைக் கண்டதும், கருப்புக் கொடிகள் பல்லாயிரக்கணக்கில், வெற்றி முழக்கங்களோடு காட்டப்பட்டன. பக்கத்திலிருந்த விளக்குகளின் ஒளியால், காட்டப்பட்ட கருப்புக்கொடிகளைக் கண்டபோது பண்டைத் தமிழர்கள் பகைவரை வெல்ல பாய்ந்து போரிடும்போது காற்றினும் கடிது சுழல்வார்களாமே, அது நினைவுக்கு வந்தது! அவ்வளவு ஆவேசமும் ஆர்வமும் அங்கு நிறைந்து ததும்பி வழிந்தது! அந்த வெற்றிக் காட்சியைக் கண்டபோது,

“மண்ணிடை— வாளையேந்திப்
பகைப்புலம் மாய்ப்பதற்கு
எண்ணிலாத் தமிழர் உள்ளார்
எனும்நிலை காண்பதென்றோ?”

என்ற புரட்சிக் கவிஞரின் ஆசை கனவாகிவிட்டது இனி அச்சமில்லை! அடுக்கடுக்காக அல்லல்கள் வரினும் அவைகளைத் தூளாக்கித் துள்ளிக் குதிக்கும் வேல்களாகிவிட்டார்கள்—திராவிடக் காளைகள் என்ற காட்சி தென்பட்டது!

தமிழோசை

தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்கென வெளிவரும் மாதவெளியீடு இது வொன்றே!

புலவர் குழந்தையின்
எழுத்தோவியங்கள் மிளிர்வது!

தனி இதழ் 0—4—0
ஆண்டு சந்தா ரூ. 3.

15—10—50 ல் வெளிவரும்

எல்லா ஊர்களிலும் விற்பனையாளர் தேவை

பொறுப்பாளர்,

தமிழோசை நிலையம்

(ADVT) பவானி (வழி) ஈரோடு.

திருக்கழுக்குன்றத்தில் கருப்புக்கொடி!

கழகத் தோழர்களுக்கு காவல்

பொதுமக்கள் வீராவேசம்

10—9—50 காலை டில்லி மந்திரி திவாகர் சரித்திரப்புகழ்வாய்ந்த மகாபலிபுரத்தைப் பார்க்கச்சென்றார். அவர் வருகிறார் என்ற செய்தி திடீரென்றுதான் கிடைத்தது என்றாலும், வீதிகளெல்லாம் "திவாகரே திரும்பிப்போ," திராவிடநாடு திராவிடருக்கே" என்ற எழுத்துக்கள் நிறைந்திருந்தன. மகாபலிபுரம், சிறியவூர் என்றாலும் டில்லி மந்திரியை கருப்புக்கொடிகள்தான் வரவேற்றன! மக்கள் கரங்களில் மட்டுமல்ல, வீடுகளின் கூரைகளிலும், வழி நெடுக இருந்த மரக்கிளைகளிலும் கருப்புக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

திருக்கழுக்குன்றம்

மகாபலிபுரம் தந்த 'கருங்கொடி' வரவேற்பைப்பெற்றுக்கொண்ட டில்லி சர்க்கார் மந்திரி திவாகர் காலை 10 மணி சுமாருக்கு திருக்கழுக்குன்றம் திரும்பினார். கருப்புக்கொடி காட்டத் தக்க ஏற்பாடுகள், கழகத்தோழர்களால் பிரமாதமாகச் செய்யப்பட்டிருந்தன. திராவிடமுன்னேற்றக் கழக வீரர்களும் வழிநெடுக கருப்புக்கொடிகளோடு தயாராக கால்கடுக்க, நின்றுகொண்டிருந்தனர்.

காலையில் 8 மணிக்குத்தான் திவாகர் திருக்கழுக்குன்றம் வருவதாகக் கழகத்தோழர்களுக்குச்செய்தி கிடைத்தது. டில்லி மந்திரிவர, இடையில் 2 மணி நேரம்தான் அவகாசம் இருந்ததென்றாலும், கோயில்பட்டி தீர்மானப்படி கருப்புக் கொடி காட்டவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தனர்.

காவலில் தோழர்கள்

அந்த நேரத்தில் போலீஸ் டி. ஓ. எஸ். பியும், செங்கற்பட்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், திராவிட முன்னேற்றக் கழக மத்திய செயற்குழு உறுப்பினர்களான தோழர்கள் சி. பஞ்சாட்சரம், சி. எம். கண்ணபிரான், திருக்கழுக்குன்ற தி. மு. க. துணைசெயலாளர் தோழர் பி. நடேசன், செயற்குழு உறுப்பினர்களான தோழர்கள் எம். எஸ். மணி, எஸ். ரகுநாதன், கா. சோமசுந்தரம், வி. முருகன், டி. என். வேதாசலம் முதலியவர்களை அழைத்து கருப்புக் கொடி காட்டக் கூடாதெனத் தடுத்தனர்.

> **கருப்புக்கொடி காண, கலக்கம்!**
>
> 11—9—50 மாலை 3 மணிக்கு டெல்லி மந்திரி திவாகர் சென்னை சட்டக் கல்லூரிக்கு வருவதாக வெளியிடப்பட்டிருந்தது.
>
> அதையொட்டி அங்கு கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்த கழக வீரர்கள் ஏற்பாடுகளோடு இருந்தனர். ஆனால், முன் அறிவிப்பின்றி, இரகசியமாக நண்பகல் 12 மணிக்கே, திவாகர், சட்டக் கல்லூரிக்கு வந்துவிட்டு சிறிது நேரத்திற்கெல்லாம் திரும்பிவிட்டார்!

"கருப்புக் கொடி காட்டுவது ஜனநாயக உரிமை, ஏன் காட்டக் கூடாதென்கிறீர்கள்?"

"அதெல்லாம் தெரியாது—கூடாது என்று மேலதிகாரிகளிடமிருந்து தகவல் வந்திருக்கிறது"

"அத்தகவலின்படி தான் எங்களைத் தடுக்கிறீர்களா?"

"ஆமாம்!"

"நீங்கள் உங்கள் மேலதிகாரிகள் தகவலை நிறைவேற்ற விரும்புகிறீர்கள். அது போலவே எங்களது மேலிடமாகிய, திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழகம், டில்லி மந்திரிகளுக்குக் கருப்புக்கொடி காட்டுமாறு எங்களுக்குத் திட்டம் தந்திருக்கிறது. அது ஜனநாயகத்துக்கு கட்டுப் பட்டமுறை. ஆகவே..."

போலீஸ்அதிகாரிகள், கழகத்தவர் தீவிரமாக இருப்பதைக் கண்டதும் மேற்படி எட்டு பேர்களையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச்சென்று காவலில் வைத்தனர்.

தீ, மூண்டது!

கழகத் தோழர்களைக் காவலில் வைத்ததால் ஆத்திரத் தீ ஊர் முழுதும் பரவியது. அதன் விளைவாக நூற்றுக் கணக்கான வீரர்கள் கருங்கொடி தாங்கி, திவாகர் வந்ததும் மலைபடிவாரத்திலும், ஏரிப்பேட்டையிலும், டிரங்க் ரோடிலும் 'திவாகரே திரும்பிச் செல்லும்', 'திராவிட நாடு திராவிடருக்கே', 'வட நாட்டாதிபத்தியம் ஒழிக' என்று பேரொலி எழுப்பினர். திவாகர் காரை நோக்கியும் கருங்கொடிகள் வீசப்பட்டன.

திருக்கழுக்குன்றத்தைவிட்டுப் போகும் வரையில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது.

தோழர்கள் விடுதலை!

காவலில் வைக்கப்பட்டிருந்த தோழர்கள் அனைவரும், திருக்கழுக்குன்றத்தைவிட்டு திவாகர் சென்ற பின்னர் 10-15 மணிக்கு வெளியே விடப்பட்டனர். (தி)

சென்னை திராவிட இனத்திற்கு நன்றி

9—9—50ல் அன்று சென்னைக்கு வந்த டில்லி மந்திரி திவாகருக்குக் கருப்புக்கொடிகாட்டி "திரும்பிப்போ திவாகரே!" "வடநாட்டான் திராவிடத்துக்கு எஜமான் அல்ல" என்று வீரப்போர் பரணிபாடிய சென்னை மக்களின் எழுச்சி எதிரிகளைக் கலங்கச் செய்துவிட்டது. கோவில்பட்டி மாகாணச் செயற்குழுவின் தீர்மானம், அதை யொட்டிய பொதுச்செயலாளரின் அறிக்கை, இவைகளை ஏற்று சென்னை மாவட்ட திராவிடமுன்னேற்றக் கழகம் செய்த முடிவு அன்று சென்னை மக்களால் பெருமிதத்துடன் அமுலாக்கிக்காட்டப்பட்டதைக்காண, கேட்க, மானமுள்ள திராவிடன் பூரிப்படையாமல், இருக்கவே முடியாது. திராவிடர் இயக்கம் சிதைந்துவிட்டது, குலைந்துவிட்டது, கல கலத்துவிட்டது என்று ஏளனம் பேசிய எதிரிகளுடைய எண்ணங்களுக்கு ஓர் வெடிகுண்டாகவே விளங்கியது அன்றைய கருப்புக்கொடி காட்சி. திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டும் கலந்துவிட்டதே இதென்ன விபரீதம் என எதிரிகள் ஏங்கும்படி விளங்கிற்று! கழகத்தின்சார்பில் கருப்புக்கொடிகள் வினியோகித்தது கொஞ்சமே. ஆயினும், அன்று பத்தாயிரம் மக்களின் கரங்களிலேகருப்புக்கொடி. சிறகுகளை விரித்துக்கொண்டு வானத்திலேபறந்து செல்லும் பெரும்பருந்துகள் கருப்புக்கொடிகளை தங்கள் மூக்குகளிலே கொத்திச் செல்லும் காட்சி திவாகரை திகைக்கச் செய்துவிட்டது.

சென்னை மக்களே, வெளிமாவட்ட தி. மு. கழகத்தோழர்களே! நீங்கள்கொடுத்தஒத்துழைப்புக்கு நன்றி. சென்னையில் உள்ள தமிழ்த்தேசியப்பத்திரிகைகள், தில்லுமல்லாக நடந்து கொண்டாலும், ஓரளவுக்கு உண்மையை எடுத்துரைத்தது, மெயில் பத்திரிகையையும், மிக நேர்மையாக நடந்துகொண்ட சென்னைப் போலீசாரையும் பாராட்டுவதோடு, மீண்டும் கழகத் தோழர்களுக்கு சென்னை மாவட்ட திராவிடமுன்னேற்றக் கழகச் சார்பாக எனது நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணக்கம்,

கே. கோவிந்தசாமி.

*

சிவகெங்கை மாநாட்டுச் செய்தி

—*—

இராமனதபுர மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டின் செயலாளர் தோழர். இராமசுப்பையா மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் கடந்த 40-நாட்களாகச் சுற்றி வசூல் வேலையுடன் டிக்கட்டுகளையும் ஆங்காங்கே குறிப்பிட்ட நபர்களிடம் விற்பனைக்காகச் சேர்த்துவிட்டு செட்டிநாட்டுப் பகுதிகளில் மீண்டும் வசூலுக்காகச் சென்றிருக்கிறார்.

வரவேற்புக் குழுத் தலைவரும் வழக்கறிஞருமான இராசசேகரன் கடந்த இரண்டு நாட்களாக புதுக்கோட்டை — அதன் பகுதிகளில் மும்முரமான வசூல் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்.

மாநாட்டுக் கூட்டுச் செயலாளர் சிவசண்முக சுந்தரர், மாவட்டச்செயலாளர் M. S. இராமசாமி, விருதுநகர் உத்தண்டன் முதலியோர், அருப்புக்கோட்டை ஸ்ரீ வில்லிபுத்தூர், சாத்தூர் தாலுகாக்களில் டிக்கட் விற்பனையில் ஈடுபட்டிருப்பதாகவும், நல்ல விற்பனையாவதாகவும் தகவல்கள் தந்துள்ளனர்

பொருளாளர் இராமலிங்கம் திருவாடானை' பரமக்குடி தாலுக்காக்களில் இயக்க முக்கியஸ்தரான ச. பழனிவேலுவின் உதவியுடன் நிதி வசூலில் முனைந்துள்ளார்.

"சங்குநாதம்" இதழின் அலுவலாளர்களின் உதவியுடன் வழக்கறிஞர். சத்தியேந்திரன் சிவகெங்கை வட்டாரங்களில் விளம்பரங்கள் செய்வதுடன் டிக்கட் விற்பனையிலும் நாட்டம் செலுத்தி வருகின்றார்கள்.

வசூல் செய்பவர்களிடமிருந்து கிடைக்கும் செய்திகளிலிருந்து, மாவட்ட மக்கள் மாநாட்டின் சிறப்பிலே கொண்டுள்ள அக்கரையும், டிக்கட்டுகள் வாங்கும் ஆர்வத்தினையும் நோக்கினால்— அதிகப்படியான டிக்கட்டுகள் அச்சடிக்க வேண்டிய பொறுப்பினையும், மாநாட்டிற்கு வருவோர்க்கு செய்யவேண்டிய வசதிகளை விரிவுபடுத்த வேண்டிய நிலையினையும் வரவேற்புக் குழுவினர்க்கு அளித்து 'அல்லல்' (!) படச் செய்கின்றனர் போலும்!!

டிக்கட்டுகள் விற்குமிடம்

தனுஷ்கோடி—காசி, பரமக்குடி—சுந்தரம், மானாமதுரை — இராமனுதன்—தேவகோட்டை இராம. வெள்ளையன், திருப்பத்தூர்—பிச்சை, இராவனுதபுரம்—வீரமணி, சொக்கனுதபுரம்— அன்பழகன், கல்லல்—மகாதேவன், காரைக்குடி—அ. ச. நடராசன், திருப்புவனம்—சோலையா, நாட்டரசன் கோட்டை-அருணகிரி

டிக்கட்டுகள் விற்பனைசெய்யும் தோழர்கள் உடனுக்குடன் பணத்தை அனுப்பிவைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

மாநாட்டின் வெற்றி—மறத்தமிழன் வெற்றி!
வருக திரண்டு!! தருக வெற்றி!!!

தண்டபாணி—விளம்பர உறுப்பினர்

*

திருமணங்கள்

24—8—50ல் திருவொற்றியூரில் டி. சண்முகம் தலைமையில் பார்த்தசாரதி — தாந்தோனி திருமணம் நடந்தது. சி. என். அண்ணாதுரை மணமக்களைப் பாராட்டிப் பேசினார்.

4—9—50ல் திருக்கடையூரில் அமரன் பி. ஏ. (ஆனர்ஸ்) தலைமையில் ஜெயராமன்-பாப்பா திருமணம் நடந்தது.

5-9-50ல் ஆ. கா. அப்துல் ஹமீது பாக்கவி முன்னிலையில், திருக்களாச்சேரியில், தி. மு. க. செயலாளர் இ. என். முகைதுமதீன் – உம்முகல் மாபேகம் திருமணம் நடந்தது.



(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுவின் தீர்மானம், வடநாட்டு மந்திரிகளுக்குத் திராவிடர்கள், கருப்புக்கொடி காட்டவேண்டும் என்பது.

இது கவனிக்கப்படவேண்டிய விஷயம் அல்ல, என்பது இந்த நிருபர்களின் எண்ணம். எனவே கோயில்பட்டித் தீர்மானத்தை இருட்டடிப்பு செய்துவிட்டனர். பூனை கண்ணை மூடிக்கொண்டது!

தீர்மானம் போட்டுவிடலாம்—வாய் வீரத்துக்குப் பஞ்சமா — காரியத்தில் ஈடுபடும்போது தானே தெரியும். இதுகளாவது, தைரியமாகக் கருப்புக் கொடி பிடிப்பதாவது—என்று எண்ணினர் அரசியல் உலகிலே உள்ள 'அசடுகள்.'

தீர்மானம் போட்டுவிட்டோமே, ஒப்புக்காகவாவது இரண்டொரு கொடிகளாவது காட்ட வேண்டாமா, என்று பயந்துகொண்டு, "இதுகளில் சிலதுகள்" கருப்புக்கொடி காட்டக்கூடும், ஆனால், "மஹாஜனங்கள்" ஆதரிக்கவே மாட்டார்கள்—என்று, அரசியல் உலகிலே நடமாடும் 'அலறல்கள்' பேசின.

திராவிட முன்னேற்றக் கழகம், தன் கடமையைச் செவ்வனே செய்தது—எனவேதான், இந்த நிருபர்கள், ஓடோடிச் சென்று திவாகரைப் பேட்டி கண்டு, பேச நேரிட்டது.

இருட்டடிப்பு—ஏளனம்—சாபம்—எதுவும், 'இதுகளை' ஒன்றும் செய்யக் காணோமே, எங்கிருந்தோ கிளம்பி வருகின்றனவே, படைகள், என்ற ஏக்கம், இந்த 'பேட்டி'யை அவசியப்படுத்தி இருக்கிறது.

காரணமின்றி, அடி பலமா? என்று யாரும் கேட்கமாட்டார்கள் — அதுபோலவே கருப்புக் கொடி கண்டு கருத்திலே அரிப்பு ஏற்படாமல், நிருபர்கள் இதுபற்றிப் பேசமாட்டார்கள்.

அடிபட்டிருந்தாலும் வெளியே சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு, 'ஒன்றுமில்லை' என்று பதில் கூறுவதுதானே உலக வழக்கம். அதே முறையிலே திவாகரும் பதில் கூறி இருக்கிறார் கருப்புக் கொடி கண்டு நான் கவலைப்படவில்லை, என்று.

கருப்புக் கொடி காட்டும் காரியம், வெற்றிகரமாகவும் கோரிய பலன் கிடைக்கும் விதமாகவும் நடைபெற்றுவிட்டதால், — திவாகர் கவலைப்படவில்லை என்று எழுதுவதன் மூலம், இதன் முக்கியத்துவத்தை மறைக்கலாம், என்று எண்ணுகின்றனர் அரசியல் ஏமாளிகள்.

சென்னை அறியும், அன்றைய சம்பவத்தின் அருமையை!

தினசரி கிடையாது நமக்கு—கருப்புக்கொடி நாள் குறித்து அறிவிப்புகள் தொடர்ந்து வெளியிட.

வசதி கிடையாது, ஏற்பாடுகள் செய்ய.

நாட்கள் அதிகம் கிடையாது, இது குறித்துப் பிரசாரம் செய்ய.

ஒரே ஒரு பொதுக்கூட்டம் — அதுவும் பாதையோரத்தில மேடை—தான் போட முடிந்தது.

இந்த அளவுதான் முன்னேற்பாடு - எனினும் அடைந்த வெற்றி, சோர்ந்த உள்ளங்களிலே புது உற்சாகத்தையும், விசை ஒடிந்த தேகத்துக்கு வன்மையையும் தருவதாக அமைந்திருந்தது.

ஆடவரும் பெண்டிரும், முதியவரும் இளைஞரும், மாணவரும் பாட்டாளிகளுமாக, அன்று ஆர்வத்துடன் கலந்துகொண்ட காட்சியை எவரும் மறக்க முடியாது.

திவாகர் கவலைப்படவில்லையாம்!! திவாகர் தீரர், ஆகவே கவலைப்படவில்லை என்று அவர் வீரத்துக்குச் சிந்து பாடட்டும், அரசியல் பூனைகள்—நமக்குக் கவலையில்லை.

கோயில்பட்டியிலே தீர்மானித்தோம்-சென்னையில் செய்து காட்டினோம்!

வடநாட்டு மந்திரிக்குக் கருப்புக்கொடி காட்டுவது என்பது, தொடர்ச்சியாக இனி நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கும்.

திவாகர்கள் கவலைப்படுகிறார்களா, இல்லையா, என்பதல்ல, நமது பிரச்சினை. வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் உரிமை உணர்ச்சி, அறிவாற்றல், செயல் திறம், திராவிடப்பெருங்குடி மக்களுக்கு இருக்கிறதா இல்லையா, என்பதே நமது பிரச்சினை! அதிலே நாம், மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறோம்.

ஊர் பேர் தெரியாத திவாகர் வருகிறபோதே, இந்த அளவு நாம் செய்துகாட்ட முடிந்தது—இனி வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் மூலவர்கள் வருகிறபோது, அளவும் அழகும், எவ்வளவு இருக்கும், என்பதை எண்ணும்போதே, இதயம் களி நடனமாடுகிறது.

எஃகு கம்பிகளே! திராவிட ஏறுகளே! செயலாற்றிய செம்மல்களே! வீரத் தாய்மார்களே! உங்கள் பணி கண்டு, பெருமையடைகிறது திராவிடம். உங்கள் அறிவாற்றலின் துணைகொண்டு நடத்தப்பட இருக்கும் அறப்போரின் விளைவாக, திராவிடத்தின் மீது பூட்டப்பட்டுள்ள தளைகள் நொறுக்கப்பட்டு விடும்—விடுதலை கிடைத்து விடும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

உங்கள் அனைவருக்கும் எமது நன்றி

திவாகர் அறியார் திராவிடரின் உரிமைப் போர் உணர்ச்சியை—அறிந்தாலும் வெளியே கூற மனம் இடம் தராதல்லவா!

நாம் அறிவோம்—நாடு அறியும் — அது போதும்.

தொடர்ந்து பணியாற்றுங்கள் — வெற்றி நமதே!

திருமணம்

3—9—50 ஞாயிறு காலை 8 மணிக்கு தூத்துக்குடி நீதிமாணிக்கம் அவர்கள் புதல்வன் நடராசனுக்கும், விருதுநகர் சுப்பையாநாடார் மகள் ராஜேஸ்வரிக்கும், விருதுநகரில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

திரண்டுவாரீர் சிவகங்கை நோக்கி!

இராமநாதபுர மாவட்ட தி. மு. கழக

முதல் மாநாடு

30-9-50, 1-10-50 சனி, ஞாயிறு தேதிகளில்

இராமச்சந்திரன் பந்தலில் நடைபெறும்.

தலைவர்:- என். வி. நடராசன்

துவக்குபவர்:- எம். எஸ். கனகராசன்

சி. என். அண்ணாதுரை, கவிஞர் பாரதிதாசன்

இன்னும், இயக்கத் தோழர்கள் பலரும் கலந்து கொள்வர்.

சனி இரவு
எம். எம். மாரியப்பா,
நாகூர் ஹனீபா,
★ இசை விருந்து ★

ஞாயிறு இரவு
கே. ஆர். இராமசாமி,
சி. என். ஏ. பங்கு கொள்ளும்
★ சந்திரமோகன் ★

வரவேற்புக் குழுத்தலைவர்,
இராஜசேகரன், B. A., B. L.

செயலாளர்,
இராம. சுப்பையா,

பொருளாளர்:—
இராமலிங்கம்.

விளம்பர உறுப்பினர்கள்:—
சத்தியேந்திரன் B. A., B. L. தண்டபாணி.

மாநாட்டுக் கட்டணம் வரவேற்பாளர் ரு 5, பிரதிநிதி ரு 2, பார்வையாளர் ரு 1.

பெண்களுக்கு, தனி இடவசதி உண்டு.

Edited Printed & Published by C. N. Annadurai M A at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram